# DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.93/2022**

**PW–1**

**Date :–23.05.2024**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ராமலிங்கம் | Caste | |
| த/பெ. | திரு. கிருஷ்ணன்பிள்ளை | Calling | துர்தசன் ஓய்வு |
| Village | பெட்டவாய்த்தலை | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 67/2024 |

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி-**

நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எனது வீட்டில் சிசிடிவில் கேமரா 1, 4 ஆகியவற்றில் பதிவுகளை சிடி மற்றும் பென்டிரைவில் பதிவிறக்கம செய்து இன்று நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். மேற்படி சிடி , பென்டிரைவ் ஆகீய இரண்டும் அ.சா.ஆ.2 மற்றும் அ .சா.ஆ.3 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது . சாட்சியால் கொடுக்கப்பட்ட 65 B சான்று அ .சா.ஆ.4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. (எதிரிதரப்பு வழக்கறிஞர் தனக்கு சிடியின் காப்பி தராதத்தை பற்றி ஆட்சேபனை தெரிவித்தர் - அரசு தரப்பு வழக்கறிஞர் சிடி காப்பியை அந்த சமயத்திலேயே எதிரி வழக்கறிஞரிடம் சமர்பித்துள்ளார்)

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-</u>

சம்பவ காட்சிகளை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது சிசிடிவி பதிவுகளை பார்த்துதான் தெரியும் . அ.சா.ஆ.2, 3, 4

இன்றுதான்நீதிமன்றத்தில் கொடுக்கிறேன் என்றால் சரிதான் . அசா.ஆ.4 ல் உள்ள Hash value யார் தட்டச்சு செய்தார் என்றால் நான்தான் தட்டச்சு செய்தேன். எனதுவீடு பெட்டவாய்த்தலை கரூர் to திருச்சி பைபாசில் மேல்புறமாக உள்ளது என்றால் சரியல்ல இரண்டு பராளாங் உள்ளே அமைந்துள்ளது. எனது வீடு உள்ள சாலை சற்று பிசியாக இருக்கும் என்றால் ஒரளவு பிசியாக இருக்கும். எனதுவீட்டின் அருகே நடேசன் வீடு, அசோகன்வீடு, ரவி வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 500 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் 161 statement மற்றும் புகாரில் மேற்படி வீடியோ பதிவுகளை யாருடைய செல்போனில் பார்த்தேன் என்ற குறிப்பிட்டு பதிவிடப்படவில்லை என்றால் சரிதான் நான் போலிசாரிடம் எனது செல்போனில் பார்த்ததாக சொல்லியிருந்தேன் . வழக்கின் சாட்சிகளான சங்கீதா , சுப்பிரமனியன், கண்ணன் ஆகியோர்கள் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரியல்ல தெரிந்தவர்கள்.

எனது காரை எனது மகன் ஓட்டிசென்றார் . அப்போது நான் எங்கள் வீட்டில் பொருத்தப்பட்டட சிசிடிவி கேமரவை எனது மபோன் ஆப்பில் பார்த்தேன். அப்போது ஒரு நபர் எனது வீட்டு சுவரை ஏறிகுதிப்பதை பார்த்தேன். நாங்கள் உடனே வண்டியை திருபபி வீட்டிற்கு வந்தோம் அப்போது அந்த நபர் வீட்டில் உள்ள ஜன்னல் கம்பியை அம்பி கல்லை வைத்து உடைத்துக்கொண்டிருந்தார். எங்களை பார்த்ததும் வீட்டிற்கு பின்பக்கம் ஓடிவிட்டார். பின்னர் அவரை துரத்தி சென்று பார்த்தோம் அப்போதுஎங்கள் வீட்டிற்கு மேற்கே உள்ள 2ம் தெருவில் பொதுமக்கள் நாங்கள் போட்ட சத்ததின் காரணமாக அவரை பிடித்து போலீசிடம் ஒப்படைத்தோம் என்று போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் 161 statement படித்து பார்த்து சாட்சியிடம் பதில் சொல்ல கூறினார் அப்போது சாட்சி நான் சொன்ன ஒருசில சங்கதிகள் போலீசார் அவர்கள் பதிவு செய்த வாக்குமூலத்தில் குறிப்பிடவிட்டுவிட்டனர் என்று கூறுகிறார்.)

எனது புகார் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் நாங்கள் உள்ளே சென்று பார்த்தபோது எங்கள் வீட்டில் எதுவும் திருடுபோகவில்லை அதனால் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்காலம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான் . 02.08.2021 ம்தேதி காலை 08.30 மணி அளவில் அந்த நபர் எங்கள் தெருவின் வழியே நடந்து செல்வதை பார்த்து நாங்களும் அக்கம் பக்கதினர்கள் பிடித்து அந்த நபரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம் என்று கூறியுள்ளோமா என்றால் சரிதான் . நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள் சான்று பொருட்கள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல . எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/ xxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

**Sd/ xxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

Advocate